# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

19- A, Rukmini Lakshmipathy Salai, (Marshal Road),
Egmore, Chennai – 600 008.
Phone : ++91-044-2841 1376 / 2841 1378/ 2841 1379 Fax : ++91-044-2841 1377
Email : tnercmail@gmail.com Web site : www. tneo.gov.in


**முன்னிலை: திரு.ஆ.தர்மராஜ், மின்குறை தீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 2/2015**

திரு. ந. விவேகானந்த்,
இணை செயலாளர்,
நுகர்வோர் பாதுகாப்பு சங்கம்,
No.8, ஜி. எஸ்.டி ரோடு,
பொத்தேரி,
காட்டாங்குளத்தூர் – அஞ்சல் 603 203 ........மேல் முறையீட்டாளர்
(திரு.N.உதயகுமார், வழக்கறிஞர்)

எதிர்

மேற்பார்வை பொறியாளர்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130 ஜி.எஸ்.டி. ரோடு,
செங்கல்பட்டு – 608 001 ......... எதிர்மனுதாரர்
(திரு.K.முத்து, மேற்பார்வை பொறியாளர்/
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்)

**கேட்புரை நாள்: 5–3–2015**

**ஆணை நாள் : 30–4–2015**

திரு. ந. விவேகானந்த், இணை செயலாளர், நுகர்வோர் பாதுகாப்பு சங்கம், பொத்தேரி அவர்களின் 31.12.2014 நாளிட்ட மேல்முறையீட்டு மனு 2/2015ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 5.3.2015 அன்று நடத்தப்பட்டது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள், இருதரப்பினராலும், கேட்புரையின் பொழுது எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள், மற்றும் இருதரப்பினராலும் சமர்ப்பிக்கப்பட்ட எழுத்துபூர்வமான வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

**1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை :**

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மின் வழங்கலில் உள்ள சேவை குறைபாடுகளுக்கு ஒழுங்குமுறை ஆணைய விதிகளின் கீழ் தக்க நஷ்ட ஈடும் மேலும் மின் வழங்கல் சேவை உறுதி கடிதமும் பெற்று தரவேண்டும் என்று கோரியுள்ளார்.

**2. வழக்கின் சுருக்கம்:**

2.1 திரு. ந. விவேகானந்த், அவர்கள், நுகர்வோர் பாதுகாப்பு சங்கம், சென்னை –4 அவர்கள் மின் வழங்கலில் சேவை குறைவு குறித்து செங்கல்பட்டு மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்துள்ளார்.

2.2 செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 2.10.14 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. ஆனால், மேல்முறையீட்டாளர் ஆணை எதுவும் தன்னால் பெறப்படவில்லை என்று இந்த மேல்முறையீட்டு மனுவை மின் குறைதீர்ப்பாளர் முன்பு சமர்ப்பித்துள்ளார்.

**3. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள்**

3.1 மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

3.2 மின் நுகர்வோர்களின் சார்பாக நுகர்வோர் அமைப்பின் சார்பாக மின் வழங்கலிலுள்ள சேவை குறைபாடு குறித்து 6.6.14 நாளிட்ட புகார் மனு சமர்ப்பிக்கப்பட்டது. இம்மனுவிற்கு கடித எண்.த.நா.மி.கு/கோ.மிகு.ந.எண்.364/அஎண்.794/14, நாள் 12.6.14 இன்படி விளக்கக் கடிதம் பெறப்பட்டது. இது குறித்து நுகர்வோர் அமைப்பிற்கு மின்நுகர்வோர்களுக்கு தகுந்த திருப்தி அளிக்கப்படாததாலும் மேலும் மின் வழங்கலில் உள்ள குறைபாடு நிரூபனமாகியுள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின் வழங்கல் மற்றும் மின் உற்பத்தில் நேர்மையற்ற தொழில் மற்றும் அலட்சியமான மின் நுகர்வோர்களுக்கு சேவை குறைபாடு

உள்ளதை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமறை ஆணைய விதியின்கீழ் விசாரணை மேற்கொள்ளுமாறு கோரப்படுகிறது.

3.3 நுகர்வோர் குறைதீர் மன்றம் செங்கல்பட்டு அவர்களுக்கு இதுகுறித்து மனு செய்யப்பட்டது. 26.8.14ல் விசாரணையில் கலந்துகொள்ளப்பட்டது. அதன்பேரில் பல இலட்ச மின் நுகர்வோர்களின் சார்பாக நுகர்வோர் அமைப்பு பிரதிநிதியால் மன்ற விதிகளுக்குட்பட்டு விவாதிக்கப்பட்டது. ஆனால் இம்மன்ற விசாரணை அன்றைய தேதியில் கலந்துகொண்டு பதில் அளித்த மினிட்ஸ் நகல் நுகர்வோர் அமைப்பிற்கு அன்றைய தினம் வழங்கப்படவில்லை. இம்மன்ற விசாரணையில் கலந்துகொண்ட பொறியாளர்கள் மற்றும் சமூக சேவகர் அவர்களது விசாரணை ஒப்புதல் நகல் நுகர்வோர் அமைப்பின் சார்பாக பங்கேற்ற பிரதிநிதி திரு. உதயகுமார் அவர்களிடம் அறிக்கை மனு வழங்கப்படவில்லை. எனவே இம்மன்ற விசாரணையில் திருப்தி அளிக்கப்படவில்லை என 2.9.14 கடிதத்தில் நுகர்வோர் குறைதீர்மன்றம் செங்கல்பட்டு அவர்களுக்கு நகலிட்டு நுகர்வோர் அமைப்பிற்கு கடிதம் செய்யப்பட்டது. இதுகுறித்து தக்க விசாரணை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமறை ஆணையம் ஆய்வு செய்து விதியின் கீழ் உரிய நடவடிக்கையும் இம்மன்றத்தின் நடவடிக்கையின் விளக்கத்தினை நுகர்வோர் அமைப்பிற்கு பெற்றுத்தரும்படி கோரப்படுகிறது.

3.4 மேலும் நுகர்வோர் அமைப்பிற்கு இம்மன்ற விசாரணையின் நடவடிக்கையின் உத்தரவு நகல் இந்நாள் வரை வரப்பெறவில்லை. இதுகுறித்து நுகர்வோர் அமைப்பு மேற்பார்வை பொறியாளர் செங்கல்பட்டு அவர்களிடம் 23.12.14 கைப்பேசியில் தொடர்பு கொண்டதில் அமைப்பிற்கு உத்தரவு நகல் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது ஆனால், நுகர்வோர் அமைப்பிற்கு உத்தரவு நகல் வரப்பெறவில்லை என மேலும் அன்புடன் தெரிவிக்கப்பட்டது. பின்னர் மன்றத்தின் உத்தரவ நகல் வழங்குவதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படுவதாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

3.5 மேலும் தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின் வழங்கலில் உள்ள சேவை குறைபாடு (பராமரிப்பு அல்லாத) உள்ளதை 6.6.14 நாளிட்ட உள்ள மனுவின் மீது மற்றும்

மேற்பார்வை பொறியாளரின் 23.6.14 நாளிட்ட விளக்கக் கடிதத்தின் பேரில் தக்க விசாரணை மேற்பார்வை பொறியாளர், செங்கல்பட்டு அவர்களிடம் தமிழ்நாடு மினசார ஒழுங்குமறை ஆணைய விதியின்கீழ் மின் வழுங்கலில் உள்ள நடைமுறை மற்றும் பின்பற்றப்படவேண்டிய வழிமுறைகள் கடைபிடிக்காமல் மின் நுகர்வோர்களுக்கு அதிக மனஉழைச்சலும் மற்றும் நிரந்தரக் கட்டணம் செலுத்திக்கொண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்ட பிரிவின்கீழும் மற்றும் ஒழுங்குமுறை ஆணைய விதியின்கீழும் செயல்படாமல் தன்னிச்சையாக இதுகுறித்து விளம்பரத் தகவலும் மற்றும் புகார் பதிவு ஏற்பு மைய வசதி இல்லாமல் மேலும் மின் நுகர்வோர்களுக்கு சேவை குறைபாடு குறித்து வருத்தத்தை நாளிதழில் தெரிவிக்காமல் இந்த நிறுவனம் செயல்படுத்தப்படாமல் இருப்பது ஒழுங்குமறை ஆணைய விதியின்கீழ் தக்க நஷ்டஈடு தரும் வகையிலும் மேலும் மின்வழங்கல் சேவை உறுதிக் கடிதம் நுகர்வோர் அமைப்பிற்கு இந்நிறுவனத்திடம் பெற்றத்தரும் வகையில் உரிய வழிகாட்டுதல் நிலைபாடு தெரிவிக்கும் வகையில் நேர்மையாக விசாரணை மற்றும் நடவடிக்கை எடுக்க மின்குறைதீர்ப்பாளரை மின்நுகர்வோர் சார்பாக நுகர்வோர் அமைப்பு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

4. <u>எதிர்மனுதாரரின் பதிலுரை</u>

4.1 செங்கல்பட்டு மின் பகிர்மான வட்டத்தின் மின் நுகர்வோர்களுக்கு தடையற்ற மற்றும் குறைந்த மின் அழுத்தம் இன்றி மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் நேர்மையற்ற தொழில் மற்றும் அலட்சியமான சேவை குறைபாடுகள் எதுவும் இல்லை. ஏனெனில் மின் நுகர்வோர்களுக்கு அவ்வப்பொழுது ஏற்படும் குறைகளை அந்தந்த பிரிவு அலுவலக மட்டத்திலும் செயற்பொறியாளர் கோட்டத்திலும் தெரிந்து கொண்டு உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

4.2 26.8.14 அன்று மனுதாரரின் பிரதிநிதி திரு. உதயகுமார் அவர்கள் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் கலந்துகொண்டார். அவரிடம் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில்

அவரால் எழுப்பப்பட்ட ஒவ்வொரு குறைகளுக்கும் வாரியப் பிரதிநிதி செயற்பொறியாளர்/மறைமலை நகர் அவர்களால் விளக்கம் தெரிவிக்கப்பட்டு மன்ற நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்டு திரு. உதயகுமார் அவர்களால் கையெழுத்து இடப்பட்டுள்ளது.

4.3 விசாரணை நடவடிக்கை உத்திரவினை 25.10.14 அன்று மனுதாரர் விண்ணபத்தில் தெரிவித்திருந்த முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இவ்விண்ணபத்தின் விசாரணை கடிதம் எண். க.எண்.மே.பொ/பொ/செமிபவ/செ/உ.செ.பொ/மதொ.அ/ இநிபொ/மதொஅ/ கோ.மனு7/14 விசாரணை கடிதம் நாள் 14.8.14ல் அதே முகவரிக்கு தான் அனுப்பப்பட்டுள்ளது விசாரணை அழைப்பு கடிதமும் விசாரணை உத்தரவும் மனுதாரர் விண்ணபத்தில் குறிப்பிட்டிருந்த விலாசத்திற்கே அனுப்பப்பட்டுள்ளது.

4.2 புகார்தாரருக்கு மின் வழங்கல் மற்றும்மின் நிறுத்தம் இதர கோரிக்கைகள் தொடர்பாக நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் 26.8.14ல் வழங்கப்பட்ட உத்தரவில் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், சேவை வழங்கல் மற்றும் நஷ்டஈடு சம்பந்தமாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் வழங்கப்பட்ட விதிகளின்படியே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

5. <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>

5.1 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரரும் தங்களுடைய தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 5.3.2015 அன்று மின் குறைதீர்ப்பாளரின் முன்பாக கேட்புரை நடத்தப்பட்டது.

5.2 திரு. N.உதயகுமார், வழக்கறிஞர் அவர்கள் மேல்முறையீட்டாளரின் சார்பாக கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

5.3 திரு. K.முத்து, மேற்பார்வை பொறியாளர், செங்கல்பட்டு மின் பகிர்மான வட்டம் அவர்கள் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

**6. <u>மேல்முறையீட்டாளர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>**

6.1 திரு. N. உதயகுமார், வழக்கறிஞர் அவர்கள் மேல்முறையீட்டாளர் சார்பாக கேட்புரையில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதத்தை எடுத்துரைத்தார்.

6.2 அவர் தன்னுடைய மேல்முறையீட்டு மனுவிலுள்ள வாதங்களை மீண்டும் வலியுறுத்தினார்.

6.3 1.6.14ல் அரசு மின்தடை எதுவும் இருக்காது என்று அறிவித்த பின்பும், செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்தில் முன் அறிவிப்பு எதுவுமின்றி மின்தடைகள் செய்யப்பட்டன என்றும், அது மின் வழங்கல் சேவை குறைவு என்று வாதிட்டார்.

6.4 வழக்கறிஞர் அவர்கள் பராமரிப்பு பணி மற்றும் மின் சாதனங்கள் பழுது காரணங்களால் ஏற்படும் தடைகளை தவிர்த்து ஏற்படுத்திய தடைகள் ஆணையத்தின் அனுமதியற்றது என்றும் அது தவறு என்று ம் வாதிட்டார்.

6.5 மின்தடை ஏற்படும்பொழுது வீடு மற்றும் வணிக நிறுவனங்களில் A/C, UPS மற்றும் மின்சாதனங்கள் நிறுத்தி மீண்டும் இயங்குவதால் மின் பயன்பாடு மாறுகிறது என்றும் அதன் காரணமாக நுகர்வோர் அதிகமாக பயனீட்டு தொகை மற்றும் கூடுதல் வைப்பு தொகை செலுத்த நேரிடுகிறது என்றும் வாதிட்டார்.

6.6 வழக்கறிஞர் அவர்கள் 1.6.14இல் அரசு மின்தடை எதுவும் இருக்காது என்று அறிவித்த பின்பு 2.6.14 முதல் 6.6.2014 வரை செய்யப்பட்ட மின்தடை பற்றிதான் இந்த வழக்கு என்றும் தெரிவித்தார்.

6.7 மின் வழங்கல் சேவை உறுதி கடிதம் உரிமம்தாரர் வழங்க வேண்டும் என்பது ஒழுங்குமறை ஆணையத்தின் எந்த விதியில்/ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்ற மின் குறைதீர்ப்பாளரின் கேள்விக்கு வழக்கறிஞர் அவர்கள் அவ்வாறு ஆணை உள்ளதா என்பது தனக்கு தெரியாது என்று தெரிவித்தார்.

6.8 மேலும் தன்னுடைய எழுத்துபூர்வமான வாதுரையையும் சமர்ப்பித்தார். அதிலுள்ள வாதங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

(i) எதிர்மனுதாரர் குறைதீர்மன்றத்தின் உத்தரவை ஒழுங்குமுறை ஆணையம் விதித்துள்ள கால தேதிக்குள் மனுதாரர் முகவரிக்கு உரிய தகவல் கடிதம் அனுப்பப்படவில்லை.

(ii) எதிர்மனுதாரர் மின் நுகர்வோர்களுக்கு மின் வழங்கலில் உள்ள குறைபாடு குறித்து நேரடியாக அவர்களது நுகர்வோர் அமைப்பிற்கு இந்நாள் வரை தெரிவிக்கவில்லை. மேலும், எதிர்தரப்பினரின் பதில் கடிதங்கள் பழுது பராமரிப்பு குறித்தே தகவல்கள் அமையப்பெற்றுள்ளது.

(iii) எதிர்தரப்பினர் இந்நாள் வரை மின் வழங்கல் நிறுத்தம் செய்து கொண்டு வருகின்றனர். இதற்கு முறையான உத்தரவு உரிமைதாரரின் அனுமதி பெற்றுள்ளாரா என்பது தெரியவல்லை.

(iv) மின் வழங்கல் நிறுத்தம் செய்யப்படும்பொழுது, நுகர்வோர்களின் புகார்களை பதிவு செய்ய வசதி நடைமுறைப்படுத்தபட்டுள்ளதா என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

(v) மின் வழங்கல் நிறுத்தம் 2.6.14 முதல் காலை மதியம், மாலை மற்றும் இரவு நேரங்களில் திடடமிட்டு இரண்டு மணி நேரம் செய்யப்படுவது மின் நுகர்வோர்களை ஏமாற்றி தொழில் செய்வது ஆகும்.

(vi) மின் வழங்கல் நிறுத்தம் குறித்து பழுது பராமரிப்பு அல்லாத புகாருக்கு செயற் பொறியாளர் கோட்டத்தில் எவ்வாறு சரி செய்கின்றனர் என்ற தகவல் இவ்வாணையத்தின் முன் எதிர் தரப்பினர் தெளிவுப்படுத்திட அதற்குண்டான ஆவணங்கள் சமர்ப்பிக்க மேலும் அவர்களின் நுகாவோர் அமைப்பு அதற்குண்டான எதிர் ஆவணம் எதிர் தரப்பினரின் சேவை குறைபாடு குறித்து சமர்ப்பிக்கப்படுகிறது.

(vii) 26.8.14ல் அவர்களது பிரதிநிதி திரு. N.உதயகுமார் ஆகிய அவரது வாதத்தை எதிர் தரப்பினர் குறைதீர்மன்றத்தின் கையெழுத்து இடப்பட்ட ஆவணத்தை ஆணையத்தின் முன் சமர்ப்பிக்க எதிர் தரப்பனிரிடம் இவ்வாணையம் உட்படுத்தப்படவேண்டும்.

(viii) சேவை வழங்கல் மற்றும் நஷ்ட ஈடு சம்மந்தமாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் எதிர்தரப்பினர் இந்நாள் வரை எந்நெந்த மின் நுகர்வோர்களுக்கு மின்

வழங்கல் நிறுத்தம் புகார் குறித்த நஷ்ட ஈடு உரிமைதாரரால் வழங்கப்பட்டுள்ளது என்ற விபரம் தரப்படவேண்டும்.

(ix) எதிர் தரப்பினரிடையே மின் வழங்கல் நிறுத்தம் குறித்து அவர்கள் அமைப்பிற்கோ அல்லது வீடு மற்றும் வணிக மின் நுகர்வோர்களுக்கோ எந்தவொரு தகவலும் புகார் மனு ஏற்பு வசதியும் அதற்குண்டான நிவாரணமும் எதிர்தரப்பினர் ஏற்படுத்தப்படவில்லை. மேலும், முறையற்ற தொழில் பழக்கத்தில் நுகர்வோரிடையே நிரந்தரக் கட்டணம் பெற்றுக் கொண்டு வருவது குறித்து எதிர்தரப்பினரின் விளக்கம் என்ன ?

(x) எதிர்தரப்பினரின் மின் வழங்கல் நிறுத்தம் குறித்து நுகர்வோர் அமைப்பின் புகாருக்கு எதிர்தரப்பினர் சரியான முறையில் பராமரிப்பு பதிவேடோ மற்றும் அதற்குண்டான நடைமுறை சம்மந்தமான நாளிதழ்களில் வெளியிடாதது குறித்து தகுந்த விளக்கம்/ஆவணங்கள் சமர்ப்பிக்க கோரப்படுகிறது.

(xi) எதிர்மனுதாரர் உரிமைக்காரரால் நுகர்வோருக்கு இவ்வாணைய விதியின் கீழ் 100 சதவீதம் மின் வழங்கல் செய்ய இயலவில்லை என்பதால் மின் நுகர்வோர்களின் சார்பாக மின் வழங்கல் நிறுத்தம் ஏற்படாத வகையில் மின் உற்பத்தி மற்றொரு நிறுவனத்திடம் ஒப்பந்தம் கோரி தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி நுகர்வோர் அமைப்பு நுகர்வோர்களின் சார்பாக வாதுரையை பணிவுடன் முடிப்பதுடன் இது குறித்து எதிர்மனுதாரர் உரிமைதாரர் நிறுவனத்தின் மீது தக்க நடவடிக்கை எடுத்து மின் நுகர்வோர்களின் இவ்வாணைய விதியின் கீழ் மின் வழங்கலில் சேவை உறுதிக் கடிதம் பெற்றுத் தந்திட இதனால் ஏற்பட்ட நுகர்வோர் அமைப்பிற்கு தக்க நஷ்ட ஈடு பெற்றுத் தரும் வகையில் ஆணையத்தின் முன் பணிவுடன் கோரப்படுகிறது.

## 7. <u>எதிர்மனுதாரர் கேட்புரை நாளில் எடுத்துரைத்த வாதங்கள்</u>

7.1 திரு. கே. முத்து மேற்பார்வை பொறியாளர், அவர்கள் கேட்புரையில் கலந்து கொண்டு தன்னுடைய தரப்பு வாதங்களை எடுத்துரைத்தார்.

7.2 1.6.14 முதல் மின்தடை விலக்கிக் கொள்ளப்பட்டது என்று தெரிவித்தார். ஆனால், L.D centreஇன் அறிவுரையின்படி Gridன் பாதுகாப்பிற்காக load shedding செய்யப்பட்டது என்றும் தெரிவித்தார். மேலும், மின்கட்டமைப்பில் மின் உற்பத்தி எதிர்பாராத காரணங்களால் குறையும்பொழுது L.D centre இன் அறிவுரையின்படி (Load shedding) மின்பளு குறைப்பது அவசியம் என்று வாதாடினார்.

7.3 அவ்வாறு L.D centre இன் உத்தரவினால் செய்யப்படும் மின்தடைகளை சுட்டிக்காட்டி உரிமம்தாரர் ஏமாற்றி தொழில் செய்கிறார் என்று மேல்முறையீட்டாளர் கூறுவது ஆடசேபனைக்குறியது என்றும் வாரியம் சேவை மனப்பான்மையுடன் நுகர்வோர்களின் நலன்கருதி தன்னுடைய கடமைகளை செய்து வருகிறது என்றும் வாதிட்டார்.

7.4 மேலும், மின் பகிர்மான விதித்தொகுப்பின் விதி 38 மற்றும் தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திற செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின் (TN Distribution Standards of Performance Regulations) விதி 27(iii)ஐயும் சுட்டிக்காட்டி L.D centre இன் உத்தரவின்படி ஏற்படுத்தப்படும் மின்தடைகளுக்கு உரிமம்தாரர் நஷ்டஈடு எதுவும் வழங்க வேண்டியது இல்லை என்று வாதிட்டார்.

7.5 மேலும் அனைத்து பிரிவு அலுவலகங்களிலும் புகார் பதிவேடுகள் உள்ளன என்றும், அவற்றில்பதிவு பெறும் புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகிறது என்றும் தெரிவித்தார்.

7.6 மேலும், நுகர்வோருக்கும் சேவை உறுதி கடிதம் வழங்க வேண்டும் என்று ஒழுங்குமுறை ஆணைய விதிகளில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

## 8. <u>எதிர்மனுதாரரின் எழுத்துபூர்வமான வாதுரை</u>

8.1 செங்கல்பட்டு மின்பகிர்மான நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய விதிகளின்படி விசாரணை மிக விரிவாக நடத்தப்பட்டது. விசாரணையில் மன்றத்தின் முன் மனுதாரரின் சார்பாக பிரதிநிதி கலந்து கொண்டு குறைகள்

தெரிவிக்கப்பட்டு வாரியத்தால் தக்க விளக்கமும் அளிக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புகை பெறப்பட்டது.

8.2 26.8.2014 அன்று நடைபெற்ற நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தின் விசாரணை குறிப்பினை மனுதாரரின் பிரதிநிதி மறுநாள் 27.8.14 அன்று நேரில் வந்து பெற்றுக் கொள்வதாக கூறியதையடுதது மன்ற நடைமுறை குறிப்புகள் வழங்கப்படவில்லை. மறுநாள் பிரதிநிதி வரவில்லை. பிரதிநிதியால் ஒப்பளிக்கப்பட்டு மன்ற குறிப்பு நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

8.3 திட்டமிட்டு எடுக்கப்படும் மின்தடைகள் மற்றும் பராமரிப்பு காரணமாக எடுக்கப்படும் மின்தடை நிறுத்தம் ஆகியவை தொடர்பாக தினசரி நாளிதழ்களில் அறிவிக்கப்பட்டு வருகிறது. ஆனால், எதிர்பாரதவிதமாக மின்தடை ஏற்பட்டால் அறிவிக்க இயலாது. மேலும், மனுதாரரின் 6.6.14 கடிதத்திற்கு பதில் அனுப்பப்பட்டுள்ளது. அக்கடிதத்தை மனுதாரரின் ஒப்புகை பெறப்பட்டுள்ளது.

8.4 மின் வழங்கலில் எந்த சேவை குறைபாடும் இல்லை. மின் உற்பத்தி மற்றும் தேவைக்கேற்ப SLDCஆல் வழங்கப்படும் உத்தரவுகளின் பேரிலே தேவைக்கேற்ப மின்தடை செய்யப்படுகிறது.

8.5 புகார் பதிவு பதிவேடு ஒவ்வொரு பிரிவு அலுவலகத்திலும் உள்ளது.

8.6 Grid Seperation நிகழாமல் தடுக்க மின்தடை செய்யப்படும், மேலும், மின்பளு மையத்தால் தடை செய்ய வேண்டுமென அறிவித்தால் மட்டுமே மின்தடை செய்யப்படும் என மனுதாரருக்கு ஏற்கெனவே விவரம் அளிக்கப்பட்டுள்ளது.

8.7 பழுது பராமரிப்பு அல்லாத புகார்களுக்கு உடனடியாக பிரிவு அலுவலகங்கள் மூலம் தடையை நிவர்த்தி செய்ய ஆவண செய்யப்பட்டு வருகிறது.

8.8 மின் உற்பத்திக்கும் மின் பயன்பாட்டிற்கும் இடைவெளி அதிகம் இருக்கும்பொபது Grid Separationஆல் மொத்தமாக ஏற்படும் இருட்டடிப்பை தவிர்க்கும் பொருட்டு சுழற்சி முறையில்

மின்தடை செய்யப்படும். **26.8.14** அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்தில் இது தொடர்பாக பிரதிநிதியிடம் விளக்கப்பட்டது.

**8.9** As per clause 27(ii) of DSOP under the head exemption reads as folows :

*"Non compliance of the standards contained in this regualtion by the licensee shall not be treated as Violation and the Distribution licensee shall not be requested to pay any compensation to affected consumers if such violation is caused due to grid failure or a fault on the Transmission Licensee's network or on account of the instruciton given by the SLDC/SSLDC,over which the distribution licensee has no reasonbale control"*

**9.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் தீர்வு :–</u>**

**9.1** மேல்முறையீட்டாளரின் வாதங்களையும் எதிர்மனுதாரரின் வாதங்களையும் ஆராய்ந்து பார்க்கும்பொழுது கீழ்கண்டவைகள் வழக்கெழு வினாக்களாக தெரிகின்றன.

(i) தகவலின்றி ஏற்படுத்தப்பட்ட மின்தடைகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்ற மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையதா ?

(ii) மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான சேவை உறுதி கடிதம் வழங்க வேண்டும் என்பது ஏற்புடையதா ?

**10. <u>வழக்கொழு வினா ஒன்றிற்கான தீர்வு</u>**

**10.1** மேல்முறையீட்டாளர் செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்தில் **1.6.14**ல் அரசு மின்தடை இல்லை என்று அறிவித்த பின்பு **2.6.14** முதல் திட்டமிட்டு மின்தடை செய்யப்படுகிறது என்றும் ஆனால் மின்தடை பற்றிய முன் அறிவிப்பு எதுவும் தரவில்லை என்று வாதிட்டார்.

**10.2** மேற்கண்ட மின் வழங்கல் நிறுத்தங்களுக்கு ஒழுங்குமுறை ஆணையத்தின் அனுமதி அல்லது அரசின் அனுமதி எதுவும் உள்ளதா என்று வினா எழுப்பினார்.

10.3 மேலும், மின் வழங்கல் நிறுத்தம் குறித்து அவரது அமைப்பிற்கோ அல்லது வீடு மற்றும் வணிக மின் இணைப்பு நுகர்வோர்களுக்கோ தகவல் அளிக்கப்படவில்லை என்றும் வாதிட்டார்.

10.4 மேலும், மின் வழங்கல் நிறுத்தம் பற்றி புகார் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து தினமும் மின் வழங்கல் நிறுத்தம் செய்த நேரத்தை கணக்கீடுசெய்து நிரந்தர கட்டணத்திலிருந்து நஷ்டஈடு வழங்கவேண்டும் என்றும் மேற்கண்ட மின் வழங்கல் நிறுத்தத்தால் நுகர்வோர்களுக்கு ஏற்படும் இழப்பீட்டையும் எதிர்மனுதாரர் தரும்படி தக்க உத்தரவு இடவேண்டும் என்றும் வாதிட்டார்.

10.5 எதிர்மனுதாரர், 2.6.2014லும் அதற்கு பிறகும் ஏற்பட்ட மின் வழங்கல் நிறுத்தங்கள் மின் உற்பத்தி மற்றும் தேவைக்கேற்ப SLDC ஆல் வழங்கப்படும் உத்தரவின் பேரிலேயே செய்யப்பட்டுள்ளன என்று வாதிட்டார்.

10.6 எதிர்மனுதாரர் திட்டமிட்டு எடுக்கப்படும் மின்தடைகள் மற்றும் பராமரிப்பு காரணமாக எடுக்கப்படும் மின்தடை நிறுத்தம் நாளிதழ்களில் அறிவிக்கப்படுகின்றன என்று வாதிட்டார்.

10.7 மேலும், Grid Separation நிகழாமல் தடுக்க மின் பளுமையத்தால் (LD Centre) உத்தரவிட்டால் மட்டுமே தேவையான அளவு மின்பளுவை குறைக்க மின்தடைகள் செய்யப்படும். அவ்வாறு செய்யப்படும் மின்தடைகளுக்கு முன்னறிவிப்பு வழங்குவது முடியாது.

10.8 மேலும், மின்உற்பத்தி மற்றும் மின்பயன்பாட்டிற்கும் இடைவெளி அதிகம் இருக்கும்பொழுது Grid Separation ஆல் ஏற்படும் மொத்த இருட்டடிப்பை (Blackout) தவிர்க்கும்பொருட்டு சுழற்சி முறையில் மின்தடை செய்யப்படுவது உண்டு என்றும் வாதிட்டார்.

10.9 மேற்பார்வை பொறியாளர், மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி38 மற்றும் தமிழ்நாடு மன்பகிர்மான செயல்திறச் செந்தரங்களின் விதி 27(ii)ஐ சுட்டிக்காட்டி SLDC மற்றும் SSLDCயின் உத்தரவின்படி செய்யப்படும் மின்தடைகளுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டியது இல்லை என்றும் வாதிட்டார்.

10.10 மேலும், இந்த மேல்முறையீட்டாளர் நிரந்தர கட்டணத்தில் நஷ்டஈடு வழங்க வேண்டும் என்று வாதிட்டுள்ளார். நிரந்தர கட்டணம் (fixed charges) சம்பந்தமாக T.O. No.1 of 2013, dt.20.6.2013 clause 6.9.(iii) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"6.9 General Provisions applicable for Low Tension Supply:*
*i. xxx xxx xxx*
*ii. xxx xxx xxx*
*iii. In the event of disconnection of services, the consumers shall be liable to pay the fixed charges applicable for the respective category during the disconnection period.*
*xxx xx xxxx xxx*

10.11 மேற்கண்ட பத்தியின்படி மின் இணைப்பு மின்துண்டிப்பில் உள்ள காலத்திலும் நுகர்வோர் நிரந்தர கட்டணம் செலுத்த வேண்டும் என்று தெரிகிறது. மேலும், நிரந்தர கட்டணம் ஒரு மாதத்திற்கு எவ்வளவு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, நிரந்தர கட்டணம் என்பது ஒரு நுகர்வோர் தன்னுடைய மின் இணைப்பிற்கு அது உபயோகத்திலிருந்தாலும் துண்டிப்பில் இருந்தாலும் செலுத்த வேண்டும் என்றும் அது மின்சாரம் வழங்கும் நேரத்திற்கு தகுந்தாற்போல் கணக்கீடு செய்யப்படுவதில்லை என்றும் அறிய முடிகிறது.

10.12 மேற்பார்வை பொறியாளர் மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 38ஐ சுட்டிக்காட்டி SLDC / SSLDC யின் உத்தரவின்படி செய்யப்படும் மின்தடைகளுக்கு உரிமம்தாரர் நஷ்டஈடு வழங்க வேண்டியது இல்லை என்று வாதிட்டுள்ளதால் மேற்கண்ட மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 38 கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***" 38. RESTRICTIONS ON USE OF ELECTRICITY:***
*The consumer shall curtail, stagger, restrict, regulate or altogether cease to use electricity when so directed by the Licensee, if the power position or any other emergency in the Licensee's power system or as per the directives of SLDC/SSLDC warrants such a course of action. The Licensee shall not be responsible for any loss or inconvenience caused to the consumer as a result of such curtailment, staggering, restriction, regulation or cessation of use of electricity. Notwithstanding anything contained in any agreement/ undertaking executed by a consumer with the Licensee or in thetariff applicable to him, the consumer shall restrict the use of electricity in terms of his/her maximum demand and/ or energy consumption in the manner and for the period as may be specified in any order that may be made by the Licensee on the instructions of State Government or the Commission."*

**10.13** மேற்கண்ட மின்பகிர்மான விதித் தொகுப்பின் விதி 38ஐ கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது உரிமம்தாரரின் கட்டமைப்பில் ஏதாவது நெருக்கடி நிலை ஏற்பட்டாலும், மின்திறன் இருப்பு நிலையில் ஏதேனும் குறைபாடு ஏற்பட்டாலும், அல்லது SLDC / SSLDC நுகர்வோர்கள் மின்சார பயன்பாட்டை தவிர்க்க வேண்டும் அல்லது குறைத்து பயன்படுத்த வேண்டும் அல்லது சுழற்சி முறையில் பயன்படுத்த வேண்டும் அல்லது பயன்படுத்துதலை ஒழுங்குமுறை படுத்தவோ ஆணையிட்டாலும், நுகர்வோர்கள் தங்களுடைய பயன்பாட்டை குறைக்கவோ, ஒழுங்குமுறைபடுத்தவோ, முற்றிலும் பயன்பாட்டை நிறுத்தவோ வேண்டும் என்று தெரிகிறது. மேலும், அவ்வாறு பயன்பாட்டை தவிர்த்தல், சுழற்சிமுறையில் பயன்படுத்துதல், குறைத்து பயன்படுத்துதல், பயன்பாட்டை ஒழுங்குமுறை படுத்துதல், அல்லது பயன்பாட்டை முற்றிலும் நிறுத்துவதால், நுகர்வோருக்கு ஏற்படும் இழப்பீடுகள், வசதியின்மைக்கும், உரிமம்தாரர் பொறுப்பேற்க வேண்டியது இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

**10.14** மேலும், மேற்பார்வை பொறியாளர், தமிழ்நாடு மின் பகிர்மான செயல்திறச் செந்தரங்களின் விதி 27(ii) சுட்டிக்காட்டி வாதிட்டு உள்ளதால் மேற்கண்ட விதி 27, கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

***"27. Exemption***

*(I) The standards of performance specified in this regulation shall remain suspended during Force-majeure conditions or cause beyond the control of the Licensee*

*(II) "Non-compliance of the Standards contained in this regulation by the licensee shall not be treated as violation and the Distribution Licensee shall not be required to pay any compensation to affected consumers if such violation is caused due to grid failure, or a fault on the Transmission Licensee's network, or on account of the instructions given by the SLDC/SSLDC, over which the Distribution Licensee has no reasonable control".*

*(III) Commission under specific circumstances may relax provisions of Regulations in general or in specific cases for the period specified in these Regulations."*

**10.15** மேற்கண்ட விதிகளை கூர்ந்து படிக்கும் பொழுது நாம் அறிவது, தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திறச்செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளில் கூறப்பட்டுள்ள செயல்திறச் செந்தரங்கள் Force Mejeure condition, அல்லது உரிமம்தாரரின் கட்டுபாட்டிற்கு அப்பால் உள்ள நிலையின் பொழுதும், நிறுத்தி வைக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

**10.16** மேலும் விதி 27(ii) ன்படி மின்கட்டமைப்பினால் ஏற்படும் தடையின் பொருட்டோ (Grid failure) அல்லது Transmission licensee's ன் கட்டமைப்பில் ஏற்படும் தடங்கல்களுக்கும், SLDC/SSLDCஇன் உத்தரவின்படி செய்யப்படும் மின்தடைகளுக்கும் உரிமம்தாரர், ஒழுங்குமுறை ஆணையத்தால் விதிக்கப்பட்டுள்ள செயல்திறனை, அடையவில்லை என்று நஷ்டஈடு செலுத்த வேண்டியது இல்லை என்று தெரிகிறது.

**10.17** இந்த முறையீட்டில் உள்ள காலங்களில் ஏற்பட்ட மின்தடைகள், LD Centreன் உத்தரவின்படிதான், Grid ன், நலனுக்காக செய்யப்பட்டது என்று எதிர்மனுதாரர் வாதிடுவதால், மேற்கண்ட மின்பகிர்மான விதி 38 மற்றும் மின்பகிர்மான செயல்திறச் செந்தாரங்களின் விதி 27(ii)ன் படியும் உரிமம்தாரர் நுகர்வோருக்கு இழப்பீடு வழங்க வேண்டியது இல்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**11.** **<u>வழக்கெழு வினா இரண்டிற்கான தீர்வு</u>**

**11.1** மேல்முறையீட்டாளர் செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்தில் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் மின் வழங்கல் நிறுத்தம் 2.6.14ற்கு பிறகு செய்துள்ளதால் அவர்களின் செயல்பாட்டில் சேவை குறைவு உள்ளது. எனவே, செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டத்திடமிருந்து சேவை உறுதி கடிதம் பெற்றுத் தரவேண்டும் என்று வாதிட்டுள்ளார்.

**11.2** எதிர்மனுதாரர் மேற்கண்ட காலங்களில் ஏற்பட்ட மின்தடைகள் LD centre உத்தரவின்படி Gridன் பாதுகாப்பிற்காக செய்யப்பட்ட மின்தடைகள் என்பதினால் மின்தடை பற்றிய தகவல் நுகர்வோருக்கு தரமுடியவில்லை என்று வாதாடினார்.

**11.3** மேலும், மின்பகிர்மான விதித்தொகுப்பின் விதி 38 மற்றும் தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திறச்செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளின் விதி 27(ii)இன்படியும் LD Centreன் உத்தரவின்படி செய்யப்படும் மின்தடைகளுக்கு உரிமம்தாரர் பொறுப்பேற்க முடியாது என்றும் வாதுரை புரிந்தார்.

11.4 மின்குறைதீர்ப்பாளர், மின் வழங்கல் சேவை உறுதி கடிதம் எதிர்மனுதாரர் தரவேண்டும் என்ற கோரிக்கைக்கு ஆதரவாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமறை ஆணையத்தின் ஒழுங்குமுறை விதிகள் அல்லது ஆணை ஏதேனும் உள்ளதா என்ற கேள்விக்கு மேல்முறையீட்டாளரின் பிரதிநிதி அவர்கள் அவ்வாறு விதிகள் ஏதேனும் உண்டா என்பது தனக்கு தெரியாது என்று தெரிவித்தார்.

11.5 L.D. centreன் உத்தரவின்படி செய்யப்படும் மின்தடைகள் என்பன, மின்தொகுப்பின் அப்போதைய மின்பளு மற்றும் அப்பொழுது உள்ள மின்உற்பத்தி என்ன என்பதை கவனத்தில் கொண்டு மின்தொகுப்பில் செலுத்தப்படும் மின்உற்பத்திக்கு தகுந்தவாறு மின்பளுவை குறைப்பது ஆகும் அல்லது மின்தொகுப்பில் ஏதேனும் மின்சாதனங்கள் அல்லது மின்பாதையில் பழுது ஏற்பட்டாலும் அதற்கு தகுந்தவாறு மின்பளு அல்லது மின்உற்பத்தி இரண்டையும் சமன் படுத்துவதும் LD Centreன் உத்தரவுபடிதான். மேற்கண்டவைகள் மின் தொகுப்பில் செலுத்தப்படும் மின்உற்பத்தி, மின்தொகுப்பில் இணைக்கப்பட்டுள்ள மின் பளு இரண்டையும் சமன் படுத்துவதற்கு ஏற்ப உடனுக்குடன் செய்யப்படும் செயல்கள் (real time operation) ஆகும். எனவே, அந்த நிலையில் ஏற்படும் மின்தடைகளை நுகர்வோர்களுக்கு தடை ஏற்படுத்துவதற்கு முன்பு அறிவிக்க வேண்டும் என்பது நடைமுறையில் சாத்தியமில்லை.

11.6 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உரிமம்தாரரின் பணியின் தரம், தொடர்ச்சி மற்றும் நம்பகம் தொடர்பான செந்தரங்களை குறிப்பிட்டு தமிழ்நாடு மின்பகிர்மான செயல்திறச் செந்தரங்களுக்கான ஒழுங்குமுறை விதிகளை உருவாக்கியுள்ளது அந்த விதித் தொகுப்பில் உரிமமதாரரால் பல்வேறு சேவை பிரிவுகளில் கடைபிடிக்கப்படவேண்டிய செயல்திறச் செந்தரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு உரிமம்தாரர் அந்த அந்த சேவை பிரிவுகளில் விதிக்கப்பட்டுள்ள செயல்திறனை சந்திக்க தவறிவிட்டால் பாதிக்கப்பட்ட நுகர்வோருக்கு சட்டத்தில் விதிக்கப்பட்ட ஈட்டுத்தொகை எவ்வளவுஎன்றும் தெரியபடுத்தப்பட்டுள்ளது. ஆனால், சேவை உறுதிகடிதம் எதுவும் நுகர்வோருக்கு கொடுக்க வேண்டும் என்று விதிகளில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

11.7 மேல்முறையீட்டாளரும், எதிர்மனுதாரர் சேவை உறுதிகடிதம் வழங்க வேண்டும் என்பதற்கு ஒழுங்குமுறை ஆணையத்தினால் விதிக்கப்பட்ட எந்த விதியையோ அல்லது ஆணையையோ குறிப்பிட்டு மேற்கண்ட கோரிக்கையை சமர்ப்பிக்கவில்லை. எனவே, மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான மின் வழங்கல் குறித்த சேவை உறுதி கடிதம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

12. <u>முடிவுரை:</u>

12.1 வழக்கெழு வினா ஒன்று மற்றும் இரண்டிற்கான தீர்வின்படி மேல்முறையீட்டாளரின் கோரிக்கை ஏற்புடையது அல்ல என்று தீர்வு செய்யப்படுகிறது.

12.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 2/2015 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ஆ. தர்மராஜ்)**
மின்குறை தீர்ப்பாளர்

பெறுநர்
திரு. ந. விவேகானந்த்,
இணை செயலாளர்,
நுகர்வோர் பாதுகாப்பு சங்கம்,
No.8, ஜி. எஸ்.டி ரோடு,
பொத்தேரி, காட்டாங்குளத்தூர் – அஞ்சல் 603 203

2) மேற்பார்வை பொறியாளர்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130 ஜி.எஸ்.டி. ரோடு, செங்கல்பட்டு – 608 001

3) தலைவர்,
(மேற்பார்வை பொறியாளர்),
மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம்,
செங்கல்பட்டு மின்பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
130 ஜி.எஸ்.டி. ரோடு, செங்கல்பட்டு – 608 001.

4) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர்,
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5) செயலாளர்
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை
எழும்பூர்,
சென்னை – 600 008.

6) உதவி இயக்குநர் (கணினி) – <u>மின்குறைதீர்ப்பாளரின் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
எண். 19A, ருக்மினி லட்சுமிபதி சாலை,
எழும்பூர்,
சென்னை – 600 008.